**அம்பாந்தோட்டை மாநகர சபை**
**அம்பாந்தோட்டை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 21 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 28 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அம்பாந்தோட்டை மாநகர சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழ்வரும் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 1,380,280 தொகையான செலவினங்களுக்காக கடன்கொடுத்தோர் நிதியேற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிராததுடன், தகவல் முகாமைத்துவ கட்டமைப்பிற்கான குறை நிதியேற்பாடு ரூபா 144,250 ஆகும்.

(ஆ) சபையின் முகாமைத்துவ தரவுக் கட்டமைப்பினை தாபிப்பதற்காக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக கிடைக்க வேண்டிய ரூபா 938,000 தொகையான நிதி உதவிகளுக்காக கடன்பட்டோர் நிதியேற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) ருஹுணு ப்ளாஸா கட்டிடத்தின் வாடகை வருமானம் மற்றும் வாடிவீட்டு வாடகை ரூபா 322,000 இனால் கூடுதலாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) தென் மாகாண உள்ளூராட்சி திணைக்களத்திடமிருந்து மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் செலவிடப்பட்டிருந்த ரூபா 139,118 தொகையான செலவினம் முற்பணக் கணக்கில் பதிவு செய்யப்பட்டமையால் ஆண்டிற்கான செலவினத்தில் மற்றும் கடன்பட்டோர் மீதியிலிருந்து அந்த பெறுமதி கைவிடப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் கேள்வி வாடகை, கடை வாடகை, தள வாடகை மற்றும் முதலீட்டு வருமானம் ஆகியன முறையே ரூபா 42,903 மற்றும் ரூபா 74,848 ரூபா 35,204 மற்றும் ரூபா 26,543 தொகை நிதிக்கூற்றுக்களில் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தன.

#### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள 05 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அதற்குரிய புத்தகங்கள், ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகளுக்கிடையே ரூபா 9,501,045 கூட்டுத்தொகையான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சபையின் தீர்க்கப்படாத பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 7,981,184 ஆகும்.

(ஆ) ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் தொகையின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் விநியோகிக்கப்பட்ட இயந்திர உபகரணங்களுக்காக சபையினால் செலுத்த வேண்டிய 11 அரையாண்டு கடன் தவணைகள், நிலுவையாக இருந்ததுடன், ரூபா 425,190 தொகையான ஆரம்ப கடன் மீதியின் ஒரு பகுதியையேனும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 957,424 கூட்டுத்தொகையான நிலுவை மின்சார கட்டணங்கள் தொடர்பில் பட்டோலைகள் மற்றும் பயன்பாட்டுப் பதிவேடுகளும், ரூபா 616,227 கூட்டுத்தொகையான ஊழியர் கடன் தொடர்பில் நாளதுவரையாக்கப்பட்ட ஊழியர் கடன் பதிவேடுகள் மற்றும் பட்டோலைகளும், ரூபா 425,190 தொகையான ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் தொடர்பில் மீதி உறுதிப்படுத்தல்கள், காலப்பகுப்பாய்வுகள் மற்றும் பட்டோலைகளும், ரூபா 101,660 தொகையான விளையாட்டு உபகரணங்கள் தொடர்பிலான பட்டோலைகளும் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசீலனை செய்ய முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 218 ஆம் பிரிவு | மாநகர சபையின் நிர்வாகம் தொடர்பான விரிவான அறிக்கையொன்று நிதியாண்டு முடிவடைந்த பின்னர் முடிந்தளவு விரைவாக தயாரித்து அமைச்சருக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| | (i) நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 | சபைக்குச் சொந்தமான பேருந்து மற்றும் பெக்கோ இயந்திரம் விபத்துக்குள்ளாகியிருந்த போதிலும், அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 571 | ரூபா 158,657 கூட்டுத்தொகையான 15 மீதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.3.6 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 216 ஆம் பிரிவிற்கமைய நிதியேற்பாடுகளை மாற்றம் செய்யாது நிதியேற்பாட்டினை மிகைக்கு ரூபா 11,856,262 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 2,230,000 தொகையான நிலுவை வாடிவீட்டு வாடகையினை பதிவழிப்பதற்கு உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சிடமிருந்து கிடைத்த அங்கீகாரத்தின் அடிப்படையில் அந்த தொகையினை மிகைத்து மேலும் 70,000 கூடுதலாக பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கமைய 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,253,528 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,118,444 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 135,084 ஆன அதிகரிப்பொன்றினை காட்டியது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டெழும் செலவினத்தில் 95 சதவீதம் அளவான மொத்த மீண்டெழும் செலவினம் நிலவியமையால் வருமானத்திற்கு ஒப்பாக செலவினம் மிகவும் உயர்ந்த பெறுமதியொன்றினை கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஒவ்வொரு வருடமும் சுயமாக உருவாகும் வருமானத்தை மிகைத்து மீண்டெழும் செலவினம் மேற்கொள்ளல் கருத்திற் கொள்ளக்கூடிய பெறுமதியால் தொடர்ச்சியாக அதிகரித்திருந்தமை நிதி முகாமைத்துவம் தொடர்பில் திருப்திகரமான நிலைமையொன்றல்ல என்பது கணக்காய்வின் எண்ணமாகும்.

### 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சபையின் வருமானம் சேகரித்தலின் செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 32 மில்லியனாக இருந்ததுடன், அவற்றுள் ரூபா 25.9 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருமானம் சேகரித்தலிலான செயன்முன்னேற்றம் 81 சதவீதமாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் பெற வேண்டிய வருமான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10.16 மில்லியனாக இருந்ததுடன், அவற்றுள் ரூபா 7.75 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதிலான செயன்முன்னேற்றம் 76 சதவீதமாக இருந்தது.

**2.3.2 வீதவரியும் வரியும்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான நிலுவை வீதவரி மீதி ரூபா 2,317,739 ஆக இருந்ததுடன், நீண்ட காலமாக வீத வரியினை செலுத்தாத ரூபா 5,000 இணை விட அதிகமான நிலுவை மீதி நிலவும் 54 வரி அலகுகள் அதற்குள் உள்ளடங்கியிருந்தன. இந்த நிலுவை வீதவரியினை அறவிடுவதற்ககாக மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் பிரிவிற்கமைய செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஹம்பாந்தோட்டை பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்ட கொஹாலங்கல, சிறிபோபுர, கேலியபுர, சாமோதாகம் மற்றும் மிரிஜ்ஜில ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் வீதவரியினை மதிப்பீடு செய்து அறவிடுவதற்கு மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 203 (1) ஆம் பிரிவிற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 குத்தகை வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 253 (1) ஆம் பிரிவிற்கமைய நிலுவை கடை வாடகை மற்றும் காணி வரியினை அறவிடாமையால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான ரூபா 317,818 தொகையான நிலுவை மீதியொன்று காணப்பட்டது.

(ஆ) மாநகர சபைக்குச் சொந்தமான ருஹுணு ப்ளாலயா கட்டிடத்தின் முதலாவது மாடி 2010 யூலை 05 ஆந் திகதி முதல் 30 ஆண்டுகளுக்கு நீண்ட கால அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி புதிய உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

i. மேற்படி ஆதனத்தின் நவீனமயப்படுத்தல் மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்காக குத்தகையாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 11,660,000 தொகையான மதிப்பீடு மற்றும் செயற்திட்ட அறிக்கை, சாத்தியவளக்கற்கையொன்றினை மேற்கொள்ளாது அரச பொறியியலாளர் ஒருவரது அல்லது தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரது பரிசோதனைக்கு உட்படுத்தப்படாமல் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

ii. குத்தகை உடன்படிக்கை 02.01 இற்கமைய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 2010 யூலை 5 ஆந் திகதி முதல் 06 மாத காலப்பகுதியினுள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நவீனமயப்படுத்தல் பணிகள் ஒப்பந்தக்காலம் முடிவடைந்து 07 வருடங்கள் கடந்திருந்த போதிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

iii. உடன்படிக்கையின் 02.02 பந்திக்கமைய மாதாந்த வாடகைத் தொகையினை அறவிடாமையால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக ரூபா 1,320,000 தொகையான வாடகைகப் பணம் சபையின் நிதியத்திற்கு இழப்பாகியிருந்தது.

**2.3.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரினதும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நீதிமன்ற தண்டப்பணங்களுக்காக ரூபா 94,831 மற்றும் முத்திரைக் கட்டணத்திற்காக ரூபா 2,636,900 தொகை பெறவேண்டியதாக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஹம்பாந்தோட்டை மீன் சந்தையினை குத்தகைக்கு வழங்குதல் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) ஹம்பாந்தோட்டை மீன் சந்தையின் குத்தகையாளரால் தொடர்ச்சியாக நீர்ப்பட்டியல்களை செலுத்தாமையால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிலுவை மீதி ரூபா 161,097 ஆக இருந்தது.

(ii) நிலுவை நீர்ப்பட்டியலில் ரூபா 80,000 மற்றும் ரூபா 6,660 தொகையான வழங்கல்களை துண்டித்தமைக்கான கட்டணம் சபையினால் 2016 சனவரி 22 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது.

(iii) குத்தகையாளரால் தொடர்ச்சியாக 06 மாதங்களுக்கான குத்தகை தொகையினை செலுத்தாமையால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 220,500 தொகையான நிலுவை குத்தகை தொகை மற்றும் ரூபா 161,097 தொகையான நிலுவை நீர்க் கட்டணத்தை அறவிடுவதற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(iv) நீர் விநியோகத்தினை மீள பெற்றுக்கொள்வதற்கான கட்டணம் மற்றும் தண்டப்பணத்தை கருத்திற் கொள்ளாமல் வழக்கு தொடரப்பட்டிருந்தமையால் அதற்காக செலவிட நேரும் பணமும் சபைக்கு நட்டமொன்றாகியிருந்தது.

(ஆ) பதிவேடுகளை நாளதுவரையாக்காமையால் ஒரு வருடத்திற்கு முன்னர் தேர்தல்கள் அலுவலகத்திலிருந்து கிடைத்திருந்த ரூபா 560,201 தொகையான வைப்புப் பணத்தை உரிய தரப்பினருக்கு செலுத்தி தீர்ப்பனவு செய்வதற்கோ அல்லது அரச வருமானத்திற்கு எடுப்பதற்கே நடவடிக்கை எடுக்காது, பொது வைப்புக் கணக்கில் தொடர்ந்தும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 3.2 திண்மக்கழிவு முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் கழிவு முகாமைத்துவம் தொடர்பான செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன், ஒட்டுமொத்த அதிகாரப் பிரதேசத்தையும் உள்ளடக்கும் வகையில் கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்தும் சேவை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 சனவரி 28 ஆந் திகதிய 1553/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஆ தொகுதிக்குரிய சுற்றுச்சூழல் அனுமதிப்பத்திரம் 2017 யூன் 13 ஆந் திகதி வரையிலும் கழிவினை அகற்றும் நிதியத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.5 பதவியணியினர் நிர்வாகம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பதவியணியினருக்குரிய 4 பதவிகளில் 60 பேருக்கான மிகையொன்றும் 17 பதவிகளில் 38 பேருக்கான பற்றாக்குறையொன்றும் நிலவியது. மிகையான பதவிகளை முறைமைப்படுத்துவதனைப் போன்று வெற்றிடங்களை நிரப்புவதற்கும் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

24 செலவின விடயங்களுக்காக பாதீட்டின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,270,896 கூட்டுத்தொகையான மொத்த நிதியேற்பாடும், 03 செலவின விடயங்களின் ரூபா 14,806,041 கூட்டுத்தொகையான சேமிப்புக்களும், 02 வருமான விடயங்களுக்குரிய ரூபா 1,646,944 தொகையான எல்லையினை விஞ்சிய செலவினங்களும், 02 வருமான விடயங்களின் அடையப்படாத ரூபா 259,179 தொகையான இலக்குகளும் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 4.2 பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக மாநகர சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/ந.ச.லே ஆம் இலக்க தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கைக்கமைய உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக சபையின் இரு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும், நிறுவனத்தினுள் போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களை தயாரிக்கும் போது நிதிப்பிரமாணம் 134(2) இற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) பதவியணியினர் நிர்வாகம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு